**முதலாம் முப்பருவத் தேர்வு**
**செப்டம்பர் - 2023**
**வகுப்பு -7**
**தமிழ்**

**நேரம்:2.30 மணி** **மொத்த மதிப்பெண்: 60**

**விடைக்குறிப்புகள் (வினாத்தாள் -1)**

**பகுதி – 1**

**அ) சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக.** **4x1=4**

1. அ) வழி
2. அ) ஈன்றது
3. ஆ) நேதாஜி
4. இ) தெலுங்கு

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **4x1=4**

5. பெண்
6. ஒப்புமையில்லாத
7. எங்கு
8. ஒன்று

**பகுதி -2**

**பின்வருவனவற்றுள் எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **6x2=12**

9. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக

அ) பஞ்சு ஆ) எஃகு

10. கீழ்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| முகிலன் | வயல் |
| கயல்விழி | குதிரை |
| தலைவி | கடல் |
| ஆசிரியர் | புத்தகம் |
| சுரதா | மரம் |

11. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

அ) மகளிர் x ஆடவர்
ஆ) சிறுவன் x சிறுமி
இ) அரசன் x அரசி
ஈ) தோழி x தோழன்

12. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.

அ) வாழைப்பழம் ஆ) பாட்டுப்போட்டி இ) தயிர்ச்சோறு ஈ) குருவிக்கூடு

13. கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.

அ) 133 - க௩௩ ஆ) 1947 - க௯௪௭

14. கலைச்சொல் தருக.

அ) பேச்சாற்றல் ஆ) உவமை

15. பின்வரும் சொற்களுக்கான பால்வகையைக் கண்டறிந்து எழுதுக.

அ) ஆண்பால் ஆ) ஒன்றன்பால் இ) பலவின்பால் ஈ) பெண்பால்

**பகுதி – 3**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5x2=10**

www.Padasalai.Net

16. தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்கள்.
17. வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சு மொழி ஆகும்.
18. மரம், தேன், மருந்து முதலிய பொருள்களைத் தரும். உண்ணக் காய், கனிகள் தரும். பலரும் தங்கக் குளிர்ந்த நிழல் தரும். இவையே காட்டினால் நாம் பெறும் பயன்கள் என கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.
19. ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.
20. தம் வயிற்றுக்குத் தாய் புலி தங்கிச் சென்ற மலைக்குகையை உவமையாகக் கூறுகிறார்.
21. "முத்துராமலிங்கத் தேவர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது. உதடுகளிலிருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப்பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது அவர் வழக்கம்" என மூதறிஞர் இராஜாஜி பாராட்டியுள்ளார்.
22. புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை. எனவே, புலி 'பண்புள்ள விலங்கு' என அழைக்கப்படுகிறது.

## பகுதி - 4

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** *2x4=8*

23. காட்டில் வாழும் குரங்குகள் மரக்கொம்புகளில் உள்ள கனிகளைப் பறித்து உண்ணும். நீல நிறங்கொண்ட மயில்கள், தோகை விரித்து மகிழ்ந்து நடனமாடும். பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளை அகழ்ந்தெடுத்து உண்ணும். நஞ்சினையுடைய பாம்புகள் கலக்கமுற்றிருக்கும். நரிக்கூட்டம் ஒன்றுசேர்ந்து ஊளையிடும். மிகுந்த சுவை கொண்ட தழைகளைத் தின்றபடி யானைகள் புதுநடை போட்டுச் செல்லும். சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் தம் விருப்பம் போல எங்கும் அலைந்து திரியும்.
24.

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| 1. உலக வழக்கு மொழியாகும் | இலக்கிய வழக்கு மொழியாகும். |
| 2. பிழைகளைத் திருத்திக்கொள்ள, சிந்திப்பதற்கான நேரம் குறைவு | பிழைகளைத் திருத்திக்கொள்ளவும், சிந்தித்து எழுதவும் வாய்ப்பு உண்டு. |
| 3. உணர்ச்சிக்கூறுகளை அதிகம் கொண்டது. | உணர்ச்சிக் கூறுகளை குறைவாகக் கொண்டது. |
| 4. பிறமொழிச் சொற்கள் மிகுதி | மொழித்தூய்மை பேணப்படுகிறது. |

25. நாட்டிற்கு உழைத்த சிறந்த தலைவர்கள் : எவையேனும் 4 கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.

## பகுதி - 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** *4x2=8*

26. குற்றியலுகரம் – குறுமை + இயல் + உகரம். குறுமை என்றால், 'குறுகிய' என்று பொருள். இயல் என்றால், 'தன்மை' என்று பொருள். உகரம் என்றால் 'உ' என்னும் எழுத்தாகும். குறுகி ஒலிக்கும் தன்மை வாய்ந்த உகரம் என்று பொருள்.
27. மருண்ம், போன்ம், வரும் வண்டி (எவையேனும் 2)
28.

- இலக்கணமுடையது.
- இலக்கணப்போலி
- மரூஉ

29.

www.Padasalai.Net www.CBSEtips.in

- போலிச்சொல் - நஞ்சு
- சரியான சொல் - நைந்து

**பகுதி – 6**

**அடிபிறழாமல் எழுதுக.** *2+4=6*

30. அ) இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

ஆ) அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது.

**பகுதி – 7**

**ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விரிவான விடையளிக்க.** *1x8=8*

31. பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.
32. பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.
33. பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com